—Character is not an inheritance; it is an achievement.

—Love is the life of the soul, it is the Harmony of the Universe.

—Selfishness is the punctured tyre on the wheel of progress.

—A man's worst enemies are himself and the devil.

—No sin is too small to mar the beauty of character.

—The person who tries to please every body often goes to bed tired.

—As a general rule the louder a man talks the less it amounts to.

—Could some people see themselves as others see them they would not boast so much.

—Church quarrels go out of the window when the real revival comes in at the door.

THE TEMPERANCE HERALD

மதுவிலக்குத் தூதன்.

துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்—குறள்.

1910 ௵ மே ௴.

The Madras Legislative Council.

LOCAL OPTION.

சட்டசபையில் சாராயக்கடைகளைப்பற்றிப் பிரஸ்தாபம்.

சென்ற மாதத் துவக்கத்தில் கூடின சென்னை சட்ட நிருபணசபையில் இந்தவருஷத்துவரவுசெலவு கணக்குத்திட்டத்தைப் பற்றி ஆலோசனை நடந்தேறிய பொழுது உத்தியோகஸ்தரல்லாத ஜனப்பிரதிநிதி மெம்பர்கள் சிலரால் சில தீர்மானங்கள் பிரேரிக்கப்பட்டன. அவைகளில் ஆனரபில் மிஸ்டர் பேராஜு பந்துலு அவர்களால் பிரேரிக்கப்பட்ட இரண்டு தீர்மானங்களில் ஒன்று என்னவெனில் "முனிசிபாலிட்டிகளில் கள்ளுச்சாராயக் கடைகள் புதிதாய் வைக்கும்போது அவைகளை யின்ன இடத்தில் வைக்கவேண்டுமென்பது முனிசிபல் கவுன்சில்களால் நிச்சயிக்கப்பட வேண்டு"மென்பதும், "திருவிழாஉற்சவம் போன்ற விசேஷகாலங்களில் கள் சாராயம் விற்கப் புது லைசென்ஸுகள் கொடுக்கப்படக் கூடாது" என்பதுமே. இந்தத் தீர்மானத்தைப் பலர் தாங்கிப்பேசினார்கள். ஆயினும் உத்தியோக மெம்பர்களும், வேறு சிலரும் இதை வெட்டிப்பேசி, பெரும்பாலார் அசம்மதப்படிக்கு இத்தீர்மானம் அடிபட்டுப்போனதைக்குறித்து விசனப்படுகிறோம். தேசத்தில் மதுபானம் அருந்தல் அதிகரித்து வருகிறது. ஏழை ஜனங்கள் குடியால் சீர்கெட்டுப் போகிறார்கள். இந்தச் சீர்கேட்டைப்பார்த்துத்துக்கப்படுவோர்அநேகரிருக்கிறார்கள். கவர்ன்மெண்டுக்கும் இதுதெரியாதிருக்கவில்லை. ஆகையால் தேசத்தின் நல் வாழ்வைக் கருதும் எல்லாரும் எந்தெந்த வழியில் கட்குடியை மட்டுப்படுத்த வேண்டுமோ அந்தந்த வழியிலெல்லாம் அதற்காக முயல்வது அத்தியாவசியம் மிஸ்டர் பேராஜு பந்துலு இப்போது பிரேரித்தவிஷயம் பலகாலமாய் மதுவிலக்குச் சங்கத்தாரால் எடுத்துக் காட்டப்பட்டே வருகிறது. ஜனங்கள் போக்கு வரத்தாயிருக்கிற பகிரங்கஸ்தலங்களில் கள்ளுக்கடைகள் ஸ்தாபிக்கப்படுகின்றன. இதனால் அநேகர் தாராளமாய்க் குடித்துக் கெட்டுப்போகிறதற்கிடமிருக்கிறது. தவிர திருவிழாமுதலியவிசேஷகாலங்களில் கள்ளுச்சாராயக்கடைகள் அமைக்கப் புதுலைசென்ஸ்கள் கொடுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட காலங்களில் லக்ஷக்கணக்கான சாமானிய ஜனங்கள் ஒன்றுகூடிவருவதால் அவர்கள் குடித்து வெறித்துப் பலவித அபாயங்களை விளைப்பதற்கும் ஏதுவிருக்கிறது. ஆகையால் பகிரங்கஸ்தலங்களைவிட்டு ஒதுக்குப்புறமான இடங்களில் இக்கடைகளை ஸ்தாபிப்பதினாலும். உற்சவாதிபோன்ற விசேஷகாலங்களில் கடைகள் வைக்க லைசென்ஸு கொடாமலிருப்பதினாலும் கட்குடியைக்கொஞ்சம் தடுக்கக்கூடும். இதைத்தான் மிஸ்டர் பேராஜு பந்துலு எடுத்துக் காட்டினார். மேலும் தற்காலம் அந்தந்த ஜில்லாவில் ஜில்லா கலெக்டரும், போலீஸ் சூபரின்டென்டெண்டும், முனிசிபல் சேர்மனும் சேர்ந்த ஒரு கமிற்றியாரால் கடைகளை வைப்பதும், லைசென்ஸு கொடுப்பது

மான இந்தப்பொறுப்பு நிர்வகிக்கப் படுகிறது. இதுசரியல்லவென்று காட்டி அந்தந்த டவுன்முனிசிபல் கவுன்சிலர்களுக்கு இந்தப் பொறுப்பு அளிக்கப்படுமானால் அவர்கள் ஜனங்களுடைய நிலைமையை நன்றாய் அறிந்தவர்களாகையால்கள்ளுக்கடைகளை இன்ன இடத்தில் ஸ்தாபிக்கலாம் ஸ்தாபிக்கக்கூடாது, இன்ன சமயத்தில் லைசென்ஸு கொடுக்கலாம் கொடுக்கக்கூடாது என்று தெரிந்து செய்ய யோக்கியதை யுடையவர்களாயிருப்பார்கள் என்று சொன்னார். இதை ஆதரித்துப்பேசின மற்றவர்களும் இதுவிஷயமாய் வற்புறுத்திப் பேசினார்கள். ஆனரபில் மிஸ்டர் கேசவப்பிள்ளை பேசின பொழுது, தாம்குடியிருக்கிற விடத்தில் ஒரு சாராயக் கடையுண்டென்றும், அதை நீக்க அநேகருக்கு ஆசையுண்டென்றும், ஆயினும் அதைநீக்குவது முடியாதகாரியமாயிருக்கிறதென்றும், விருப்பமில்லாத இடத்தில் சாராயக்கடைகளை வைக்காதபடி தடுக்குஞ் சுதந்தரம் ஜனங்களுக்கிருக்க வேண்டியது அவசியமென்றுஞ் சொன்னார். இவ்வாறு பலர் சாதகமாய் பேசினார்கள். ஆனால் உத்தியோக மெம்பர்களெல்லாரும், ஜனப் பிரதிநிதிமெம்பர்களில் சிலரும் இத்தீர்மானத்துக்கு விரோதமாயிருந்தார்கள். முனிசிபல் கவுன்சில்களுக்கு இந்தப் பொறுப்பைக் கொடுத்தால் அதை அவர்கள் சரியாய் நிறைவேற்ற மாட்டார்களென்றும், பொது ஜன அமைதிக்கும் சட்டப்படி நடப்பதற்கும் கவர்ன்மெண்டாரே பொறுப்பாளிகளானதால் முனிசிபல் கவுன்சில்களுக்கு அவ்வதிகாரம் கொடுக்கப்படக்கூடாதென்றும், கவர்ன்மெண்டு அதிகாரிகளே அவ்வதிகாரத்தைப் பெற வேண்டியவர்களென்றும், உத்தியோக மெம்பர்கள் ஆக்ஷேபித்துப்பேசினார்கள். இந்தவரையில் முனிசிபல் கவுன்சிலர்களுக்கு இவ்வதிகாரம் கொடுப்பதை மறுத்துப்பேசினதைப் பற்றி நாமொன்றுஞ் சொல்லப் போகிறதில்லை. கவர்ன்மெண்டு அதிகாரிகளே இவ்வித அதிகாரமுடையவர்களாயிருக்க வேண்டும், மற்றவர்களுக்கு அது கொடுக்கப்படமாட்டாதென்றால் அப்படியே செய்யட்டும். மேலும், கட்குடியால் வரும் அநர்த்தம் கவர்ன்மெண்டாருக்குத் தெரிந்துதா னிருக்கிறதென்றும், குடியைக் குறைக்கக்கூடிய வழிவகைகளையெல்லாம் கவர்ன்மெண்டார் சிறுகச் சிறுக அநுசரித்து வருகிறார்களென்றும் உத்தியோக மெம்பர்கள் வெளியிட்டதும் எமக்குச் சந்தோஷமே. ஆனால் கட்குடிப்பது முற்றிலும் பிசகல்லவென்றும், மிதமாய்க்குடித்தல் நலமென்றும், தாமே மிதக்குடியரென்றும், மிதமாய்க் குடிக்கிறவர்களுக்கிருக்கிற வசதிகளைக் குறைப்பது கவர்ன்மெண்டாரின் நோக்க மல்லவென்றும் ஆனரபில் மிஸ்டர் ஹாமிக் சொன்னதைப்பற்றித் துன்புறுகிறோம். தற்காலம் ஆல்கஹால் விஷமென்று சந்தேகமின்றி ரூபிக்கப்பட்டிருக்கிறது. அளவில் அதிகமாய்ச் சாப்பிட்டாலும் குறைத்துச் சாப்பிட்டாலும் விஷம் விஷமே. மிதக்குடியும் பாதகமானது என்று தெள்ளத் தெளிந்த தீரர்களெல்லாம் ரூபித்திருக்கிறார்கள். அப்படியிருக்க நமது சென்னை சட்டச்சபையில் மிதக்குடி நலமென்றும், மிதக்குடியர் வசதியைக்குறைப்பது கவர்ன்மெண்டார்நோக்கமல்லவென்றுஞ் சொல்லி மிஸ்டர் போராஜூபந்துலு அவர்களின் தீர்மானத்தை ஆக்ஷேபித்தது விசனமானகாரியமாகும். 12 பேர் தீர்மானத்துக்குச் சாதகமாயிருக்க 28 பேர் விரோதமாயிருந்தார்கள்.

The Present Parliament and Temperance Reform.

புது பார்லிமேண்டும், மது விலக்குச் சீர்திருத்தமும்.

நான்குவருடங்களுக்குமுன்னர் சர் ஹென்றி காம்பெல் பானர்மன் தலைமையின் கீழ் பழைய பார்லிமெண்டுசபை தன்வேலையை ஆரம்பஞ்செய்தபோது மதுவிலக்குச் சீர்திருத்தக்காரர்களின் நம்பிக்கை அதிக உச்ச நிலை யடைந்திருந்தது. அந்தக் கவர்ன்மெண்டார் மதுவிலக்கு விஷயமாய்ப் பெருத்த சீர்திருத்தங்களை நடப்பிக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருந்தார்கள். நமது நம்பிக்கையெல்லாம் குறைவின்றி நிறைவேறி முடியுமென குதூஹலித்திருந்தோம். அவர்கள் தீர்மானித்திருந்ததின் படியே எவ்வாறு லைசென்ஸ் மசோதாவைப் பிரேரித்தார்களென்றும், ஆனால் லார்ட்ஸ் சபையார் அதை எவ்வாறு அவமதித்து தள்ளிவிட்டார்களென்றும் நேயர்களெல்லாருக்குந் தெரியும். பழைய பார்லிமெண்டு கலைந்து புதுபார்லிமெண்டு இலெக்ஷன் நடப்பதற்கும், லார்ட்ஸ் சபையின் தள்ளும் அதிகா

ரத்தைக் குறைத்து அதைச் சீர்திருத்தஞ் செய்வதற்கும் காரணமாயிருந்தவைகளில் லைசென்ஸ் மசோதாவும் ஒன்றாயிருந்தது. லைசென்ஸ் மசோதாவால் மதுபான வியாபாரத்தை மட்டுப்படுத்த கவர்ன்மெண்டார் முயல, தாமே வியாபாரிகளாகவும், வியாபாரிகளுக்கு அனுகூலஞ் செய்கிறவர்களாகவுமிருக்கிற லார்ட்ஸ்சபை மெம்பர்கள் அம்மசோதா சட்டமாகாதபடிக்கு எதிர்த்து நின்று தங்களுக் கிருக்கிற தள்ளும் அதிகாரத்தைக்கொண்டு கவர்ன்மெண்டாருடைய நன்னோக்கம் வாய்க்காதபடி செய்து விட்டார்கள். இந்த விபரீதச் செய்கையே அநேகரை லார்ட்ஸ் சபைக்கு விரோதமாய் எழும்பும்படிச் செய்தது. லார்ட்ஸ் சபையே ஒழியவேண்டு மென்று பல்லோர் கூக்குரலிடவுஞ் செய்தது. நாளது காறும் இந்தப் போராட்டம் பலமாயிருந்து கொண்டிருக்கிறது. ஆங்ஙனம் லார்ட்ஸ் சபையாருடைய விரோதமிருந்தும், மதுவிலக்கு விஷயமாய்ச் சில திருத்தங்கள் நடந்தேறியிருக்கின்றன. சிறுவர் மதுவருந்தலைத் தடுக்குஞ் சட்டமொன்று செய்யப்பட்டிருக்கிறது. ஐர்லாந்தில் சாராயக்கடைகளில் சாராயம் விற்கும் மணி கணக்கைக் குறைப்பதற்கு ஒரு மசோதா கொண்டுவரப்பட்டு அது சட்டமாக்கப்பட்டிருக்கிறது. பகல் பள்ளிக்கூடங்களில் மதுவிலக்குப் பாடங்கள் சொல்லி வைப்பதற் கனுகூலமாக பாடப் பிரிவுகள் தயாரித்து கல்வியிலாகாதார் பிரசுஞ் செய்திருக்கிறார்கள். பட்ஜெட்விவாதம் நடந்தபோது லைசென்ஸ் தீர்வையைப்பற்றிப் பலமாய்ப் பேசப்பட்டிருக்கிறது. இந்தத்தீர்வை அவசியமென்று தேசமுழுமையிலுமுள்ள பொது ஜனங்கள் கருதுகிறபடியால், இது ஊர்ஜிதப்படுத்தப் படக்கூடும். இப்படியாகப் பார்க்கும்போது பழைய பார்லிமெண்டார் மதுவிலக்குச் சீர்திருத்த விஷயமாய்த் தொடங்கி விட்ட வேலை பல எதிரிடை சக்திகளின் மத்தியிலும் முன்னேறி யாக்ரமித்துவருகிறதென்றே சொல்லவேண்டும். இஃதிங்ஙனமிருக்க இப்போ தேற்பட்டிருக்கிற புதிய பார்லிமெண்டு மதுவிலக்குச் சம்பந்தமாய் என்ன செய்யத் தீர்மானித்திருக்கிறதென்று அநேகர் அறிய விரும்புவார்கள். மிஸ்டர் ஆஸ்க்வித்தின் திறமையான தலைமையின் கீழிருக்கிற இந்தக் கவர்ன்மெண்டு மதுவிலக்கு விஷயமாய் என்ன திருத்தங்கள் செய்யப் போகிறதென்று சீர்திருத்தக்காரர் அறிய ஆசிப்பது நியாயந்தான். என்ன செய்யப் போகிறது? தற்போதைய காரியங்களைக் கவனித்தால், இந்தக் கவர்ன்மெண்டும் தன்னால் செய்யக்கூடிய சாதகங்களையெல்லாம் செய்யும் என்றே நம்ப இடமிருக்கிறது. ஏனெனில் இதற்குள் இந்தக் கவர்ன்மெண்டு மதுவிலக்கு விஷயத்தில் தனக்கு அக்கரை யுண்டெனக் காட்டிக்கொண்டிருக்கிறது. கூடுமானால் பொது ஜனங்களைக் குடிவெறியினின்று காப்பாற்ற என்னென்ன முயற்சிகளைக் கையாடவேண்டுமோ அவைகளையெல்லாம் கையாட வேண்டுமென்று அபிலாஷையுற்றிருக்கிறது. ஞாயிற்றுகிழமைகளிலும் எலெக்ஷன்நாட்களிலும் சாராயக்கடைகளை மூடிப் போடுவதற்கான ஒருசட்டத்தைச்சீக்கிரத்தில்செய்யத்தீர்மானித்திருக்கிறது. ஸ்காட்லாண்டில் ஒரு மதுவிலக்குச் சட்டம் செய்யக் கருதியிருக்கிறது. 1904-ம் ஆண்டில் உண்டாக்கப்பட்ட தீமை நிறைந்த ஆக்டைத் தவிர்த்துவிடவேண்டுமென்று அநேகர் விரும்புகிறபடியால் அதை ஒருக்கால் இந்தக் கவர்ன்மெண்டார் கவனித்துச் செய்ய முயலக்கூடும். லார்ட்ஸ் சபையார்ல் தள்ளப்பட்டுப் போன லைசென்ஸ் மசோதா சட்டமாக்கப்பட்டிருக்குமானால் இந்தத் திருத்தங்களெல்லாம் அதற்குள் அடங்கிப்போயிருக்கும். அது தள்ளுண்டது மதுவிலக்குச் சீர்திருத்தக்காருடைய துக்கத்தை யதிகப்படுத்திற்று. என்றாலும் தற்போதைய கவர்ன்மெண்டாருடையகருத்தும்பலவிதத்தில் சீர்திருத்தத்துக் கனுகூலமாயிருப்பதால், இந்தக்கவர்ன்மெண்டும் தங்களாலியன்ற மட்டும் நன்மை செய்வார்களென்று நம்பியிருக்கலாம்.

The Drink Bill of Europe.

மேல்நாடுகளில் சாராயச் செலவு.

கிரேட் பிரிடனிலும் அயர்லாந்திலும் போன வருஷம் ஜனங்கள் குடித்த சாராயத்தின் மதிப்பு 15,51,62,485 பவுன். அதற்கு முந்தின வருஷம் செலவான சாராயத்தின்மதிப்பு 16,10,60,482பவுன். இந்த இரண்டாவது மதிப்பில் ராஜாங்கத்தார் புதிதாய் விதித்த வரித்தொகையாகிய 50 லக்ஷம் பவுன் சேர்த்திருப்பதால் அதைக் கழித்துவிட்டால், மேற்கண்ட தேசங்களில்

ஜனங்கள் குடித்த சாராயத்தின் மதிப்பு 110, லக்ஷம் பவுன் குறைந்திருக்கிறது. இதனால் அந்த ஜனங்கள் குடிக்கும் வழக்கத்தை குறைத்துக்கொண்டு வருகிறார்களென ஏற்படுகிறது. இப்படிக் குறைத்துக்கொண்டு வருவது ஜனங்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கத்தக்க தென்பதில் சந்தேகமில்லை. இந்த நன்மை அத்தேசங்களில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் பல மதுவிலக்கு சங்கங்களின் முயற்சியால் விளைந்திருக்கின்றது. மற்ற ஐரோப்பிய தேசங்களிலும் ஜனங்கள் இந்த வழக்கமுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். ஜர்மெனி தேசத்தில், 14,50,00,000 பவுன் மதிப்புள்ள சாராயம் செலவாவதாக கணக்கிடப்படுகிறது. இந்தத் தொகை அத்தேசத்தின் சைனியத்தின் பொருட்டு, அதாவது தரைப் படை கடற்படை இரண்டையும் சேர்த்துச் செலவாக்கும் தொகைக்கு இரண்டத்தனை; கல்விக்காகச் செலவாகும் தொகைக்கு 5 மடங்கு. ஜர்மெனி தேசத்திலும் மதுவிலக்குச் சங்கங்களிருக்கின்றனவென்றே நினைக்கிறோம். இவைகளால் அத்தேசத்திலும் குடிவழக்கம் குறைந்துகொண்டுவர வேண்டும். கோடிக்கணக்காய் ஜனங்கள் இந்தக் கெட்ட வழக்கத்துக்கு செலவு செய்யும் தொகையில் ஒரு பங்கேனும் படிப்பிற் செலவு செய்தால் அவர்கள் இன்னும் உலகத்தில் உயர்ந்த பதவியைப் பெறுவார்கள். குடிக்காக இவ்வளவு செலவு செய்தும் அத்தேசங்களில் செல்வம் மிகுந்து கொண்டே போகின்றது. நமது தேசத்தில் 30 கோடி ஜனங்கள் வசித்தும் சாராயச் செலவு இவ்வளவில்லையென்று நினைத்து நாம் சந்தோஷப்படக்கூடுமாயினும், தற்காலம் இந்த வழக்கம் அதிகமாகிக்கொண்டு வருவது நன்மைக் குற்றதல்ல. குடிவழககத்தால் மேல் நாடுகளில் எவ்வளவோ குற்றங்களும் தீங்குகளும் நேரிடுகின்றன. இத்தேசத்து ஜனங்கள் பொதுவாய் சாதுக்களாயிருப்பதால், குடிவெறியால் நேரிடும் தீங்குகள் அவ்வளவில்லை. மேல் நாடுகளில் ஜனங்கள் விசேஷ சம்பங்களில் ஒன்று சேரும் போது, குடித்து, வெறித்து, அபாயங்கள் விளைவிக்கிறார்கள். நம்தேசத்திலோ உச்வங்கள் போன்ற விசேஷ தினங்களில் லக்ஷக்கணக்காய் ஜனங்கள் கூடினாலும் குடிவெறியால் அபாயங்கள் நேரிடுவதில்லை. ஆனால் கவர்ன்மெண்டார் இப்போது இப்படிப்பட்ட சமயங்களில் சாராயம் விற்போருக்கு விசேஷ லைசென்ஸ்கள் கொடுத்து, விற்க இடங்கொடுப்பதால் ஏழைகளுக்கு இவ்வாறு அபாயங்கள் நேரிட ஹேது உண்டாகி வருகிறது. இதைக்குறித்தே நமது சட்டசபையில் பிரதிநிதிமெம்பர்கள் பிரஸ்தாபங்கள் செய்தார்கள். இப்படி விசேஷ லைசென்ஸ் கொடுப்பதை நிறுத்தி விடுவது அவசியமென்று யாவரும் ஒப்புக்கொள்வார்கள். ஐரோப்பிய தேசங்களில் கள் உண்பது அவசியமென சிலர் சொல்வது போல் அவசியமெனக் கொண்டாலும், உஷ்ண தேசமான இந்தியாவில் அது சிறிதேனும் அவசியமில்லை. தேகத்தை வளர்ப்பதற்கு அவசியமானஉணவேயில்லாத ஏழைகள் தாங்கள் சம்பாதிக்கும் சொற்பக்கூலியை குடியில் தொலைத்துவிடுவது எவ்வளவு பரிதாபம்! குடியில் செலவு செய்யும் பணத்லை ஏழைகள் மிகுப்பார்களானால் அவர்கள் உணவுக்கன்றி சிறிது கல்விக்கும் அது உதவுமே. சு.மி.

Temperance Notes.

மதுவிலக்குக் குறிப்புகள்

Persia: Alcohol forbidden:—தற்கால நாகரீகத்துக்குரிய சாஸ்திரம், வித்தை முதலியவைகளைப் பெர்ஷியாவில் ஜனங்களுக்குக் கற்பிக்கலாமா என்பதைப்பற்றி அங்குள்ள இஸ்லாம்மார்க்கத்தலைவர்களிடம் கேட்டுவிடப் பட்டிருந்ததாகவும் அவர்கள் அதற்குப் பிற்கூறிய விடையோடு ஒரு தாக்கீது பிறப்பித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது:—"நவீனகாலத்துக்குரிய சாஸ்திரம், வித்தை, கைத்தொழில்கள் யாவையும் அங்கீகரித்துக்கொள்ளத் தடையில்லை. ஆனால் சாராயமட்டும் தேசத்துக்குள் வாக்கூடாது. ஏனெனில் இது இஸ்லாமார்க்கத்துக்கு விரோதமானது."

Less beer more comfort:—தற்கால பிரிட்டிஷ் மந்திரிகளிலொருவரான மிஸ்டர் வின்சன் சர்ச்ஹில் கொடுத்த சாக்ஷி:—"சாராயத்துக்கு கொஞ்ச பணம் செலவிட்டால் சாப்பாட்டுக்கு அதிக பணம் செலவிடுவோம்; அதுவும் நல்ல சாப்பாடு கிடைக்கும்; துணிமணிகளுக்கும் அதிக பணம் செலவிடலாம்; அத்துணிமணிகளும் நல்லதாயிருக்கும்; குடியிருப்புவீடுகளுக்கும் அதிக பணம் செலவிடலாம்; அவைகளும்

நல்ல வீடுகளாயிருக்கும்; பிள்ளைகள் படிப்புக்கு அதிக பணம் செலவிடலாம்; அப்படிப்பும் உயர்ந்த படிப்பாயிருக்கும். பிரிட்டிஷ் ஜனங்கள் சாராயசெலவைக் குறைத்தால் இந்த நன்கசெல்லாம் தானுக வரும்.

An old Abstainer :—கிரேட் பர்ஸ்டெடிலிருக்கும் டாக்டர் எட்கர் தம்முடைய நூறும் வயதையடைந்தபடியால் சர்ஜென்ஸ் காலேஜைச் சேர்ந்தவர்களெல்லாரும் அவருக்கு வாழ்த்து அனுப்பினுர்கள். அவர் ஒரு நாளும் சுருட்டாவது, சாராயமாவது, உபயோகித்தவரல்லவாம். 60 வயதில் ஸ்னோடன்மலை யேறினுர். 80-ல் லான்டென்னிஸ் ஆடினுர் என்று சொல்லப்படுகிறது.

Teetotal Bishops:—ஸ்டெப்னி பிஷப் சமீபத்தில் லண்டனில் ஒரு கூட்டத்தில் சொன்னதென்னவெனில், தாம் 46 பிராய மட்டும் மிதக்குடியராயிருந்தாராம். பிறகு கென்டிலிருக்கும்போது குடியாமலிருப்பதின் மேன்மையைச் சோதிக்கவேண்டுமென்று துணிந்து தேயிலைப் பானமும் லெம்னேடும் உட்கொண்டு குடியை விட்டு, குடியாதிருப்பதின் சுகத்தையறிந்தாராம். குடியை விட்டபிறகு தமக்கு யாதும் குறைவு நேரிடவில்லையென்றும் சொன்னுர். இந்தக் கூட்டத்தில் பீடம்வகித்த லண்டன் பிஷப் சொன்னது:—இப்போது எனக்கு 52 வயது. 26 வருஷகாலமாய் சாராயத்தை நீக்கிவிட்டேன். தேகம் அனலாயிருக்க, நன்ருயுழைக்க, புத்தி தெளிவாயிருக்க, நீண்டகாலம் ஜீவிக்க சாராயம் விருத்தமானது என்று டாக்டர்கள் எனக்குச் சொன்னுர்கள். லண்டனில் 20 வருஷகாலமாயிருந்து பார்த்ததில் சாராயத்துச்செலவு வீண்செலவு என்று கண்டிருக்கிறேன்.

Father and Son :—கிளாஸ்கோ நகரில் சிலநாட்களுக்கு முந்தி இந்தச்சம்பவம் நடந்ததென்று ஒருவரெழுதுகிருர்:—ஒரு தொழிலாளிக்கு 2 வருஷம் 8 மாதம் பையனிருந்தான். ஒருநாள் இக்குழந்தை பெற்ரேரோடு படுத்து நித்திரை செய்கையில் எப்படியோ விழித்துக்கொண்டு தகப்பன் கட்டில்கீழ் வைத்திருந்த விஸ்கிபுட்டியையெடுத்து அதிலிருந்து சாராயத்தைக்குடிக்க, தகப்பன் எழுந்து பிள்ளைகையிலிருந்து புட்டியை வாங்கிக்கொண்டான். சிறிது நேரத்துக்குள் குழந்தையின்முகம்கருகருத்துவிட்டது. மூச்சு விடுவது கஷ்டமாய் விட்டது. கொஞ்ச நேரத்துக்குப்பிறகு மிகவும் கஷ்டதிசையாய்விட ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனுர்கள். அங்கே அக்குழந்தை மரித்துப்போனது. குழந்தைகளைச்சாராயங் குடியாதபடி தடுக்கும் சட்டம் சமீபத்தில் செய்யப்பட்டிருந்தும் இப்படிப் பட்ட சம்பவங்கள் நடக்கிறதென்று அவர் எழுதுகிருர்,

---

Tinnevelly :—திருநெல்வேலியில் செயின் மதுவிலக்குச் சங்கமென்று ஒருசங்கம் மதுவிலக்கு விஷயமாய் உழைத்துவருகிறது. இச்சங்கத்தார் முயற்சியால், திருநெல்வேலி டவுனில் பகிரங்க வீதிகளிலிருக்கிற சில சாராயக்கடைகளை எடுத்துவிடும்படி கலெக்டருக்கு ஒரு மனு செய்துகொள்ளப்பட்டிருக்கிறதாகவும், இந்த வருஷத்தில் அந்தப்படி செய்வதாக அவரும் வாக்களித்திருப்பதாகவும் கேள்விப்படுகிரேும்.

Edison and his head :—அமெரிக்காவின் மதுவிலக்கு இராணியென்று பெயர் பெற்ற காலஞ் சென்ற பிரான்சிஸ் வில்லர்ட், ஒரு முறை பிரசித்திபெற்ற மின்சாரவித்தை யதிபனுன ஈடிஸனைப்பார்த்து "நீ சாராயத்தை முற்றுமாய் நீக்கி விட்டது எதினுலே, வீட்டுப்பழக்கமா? வேறு காரணமுண்டா?" என்று கேட்க, அவர் பிரதியுத்தரமாக "நான் எப்போதும் என் தலையைத் தகுந்த பிரகாரம் உபயோகப்படுத்த வேண்டியிருந்ததினுல் குடியாமலிருப்பது அவசியமாயிற்று" என்று சொன்னுராம்.

Lincoln and his mother :—அமெரிக்காவின் பிரஜாதிபதி அரசராயிருந்த எபிராம் லிங்கால்ன் சிறுவனுயிருந்த முதல் சாராயங் குடியாமலிருந்தார். அதனிமித்தம் அவரை வாலிபத்தில் கண்டித்த ஒரு சிநேகிதனுக்கு அவர் சொன்னதென்னவெனில் "என்தாய் மரிக்கு முந்தி நான் ஒரு நாளும் சாராயங் குடிப்பதில்லையென்று வாக்குக்கொடுத்தேன். அன்றைக்கு எப்படி நான் வாக்குப் பண்ணினேனே அதே

போலே இன்றைக்கு மிருக்கிறேன்" என்று சொன்னாராம். கடைசிவரையில் அவர் அப்படியேயிருந்து சாராய வர்த்தகத்துக்குச் சத்துருவாய் விளங்கினார்.

General News and Notes.

பொதுவர்த்தமானக் குறிப்புகள்.

A Surat Paper writes:—இப்போது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அரசாங்க விஷயத்தில் இந்தியரோடு சேர்ந்துழைக்கத் தலைப்பட்டு விட்டார்கள். சற்றுக் காலதாமதமாய்ச் செய்தாலும் இந்தவகையில், அந்நிய அரசாக்ஷியைக் குறித்த நல்லெண்ணத்தை இந்தியர் மனதில் அழுந்தச் செய்யும்படி முதலாவதாக முயன்ற சக்கிரவத்தியாகிய மகா அக்பரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றியிருக்கிறார்கள். ராஜா தோடர்மாலும் ராஜாபிர்பாலும்அரசாங்கத்தாரின்நம்பிகை பெற்றமந்திரிகள்,பிரின்ஸ் மான்சிங்,சக்கிரவர்த்தி இராணுவத்தை நடத்தின தளர்த்தன். அரசரையும் குடிகளையும்மனதோடுமனதாய் இணைக்க ஏதுவாய் சக்கிரவர்த்தியின் அன்புக்குரிய இராணிகள் இந்து மன்னர்களின் புத்திரிகளாயிருந்தார்கள். ஜிஹாஞ்சிர் சக்கிரவர்த்தி இந்து தாயினிடம் பிறந்தவன். அதேபோல இப்போதும் நடக்கமாட்டாதென்று யார்சொல்லக் கூடும்? இராஜ புதனத்தின் நீலநிற இரத்தம் தன் நாளங்களில் பாய்ந்தோடக்கூடிய பிரிட்டிஷ் சக்கிரவர்த்திகள் டில்லி சிம்மாசனத்திருந்து ஆளுகை செய்யலாமே, யாருக்குத் தெரியும். அப்படியாகிற காலத்தில் தான் இந்தியாவில் சுவராஜ்யம் வரும்.

The first Bengal Opium sale:—நடைமுதல் சர்க்கார் வருஷத்து முதல் மாதத்தில் வங்காளத்து அபினி விற்பனை கல்கத்தாவில் நடந்தது, 3300 பெட்டி அபின் விற்பனைசெய்யப்பட்டது. பெட்டியொன்றுக்கு கவர்ன்மெண்டார் 1750 ரூபாய் வருமெனமதிப்பிடித்தார்கள். ஆனால் பெட்டியொன்று 3926 ரூபாய் விலை போனது. இது மாதவாரி கவர்ன்மெண்டுக்கு 68½ ஆயிரம் ரூபாய் அதிக வருமான மிருப்பதைக் காட்டும். இந்த கணக்குப்படி கவர்ன்மெண்டுக்கு வருஷத்தில் 8 கோடி ரூபாய் அதிகப்படுகிறது. இதனால்தான் அபினி விளைவை அடியோடே நிறுத்த அஞ்சுகிறார்கள்,

Riots in South China:—பிற் கூறிய கலகத்துக்குரிய செய்தி ஹாங்கௌவிலிருந்து தெரிவிக்கப்பட்டது. சாங்ஷா பட்டணத்தை 24000 கொள்ளைக்காரர்கள் சூரையாடிக்கொண்டிருக்கிறார்கள். அன்னியர்களால் பழக்கப்பட்ட அறுபதினாயிரம் துருப்புகளும் கலகக்காரர்களுடன் சேர்ந்துவிட்டனர். நகரத்தில் எங்கு பார்த்தாலும் தீப்பற்றி யெறிந்து கொண்டிருக்கிறது. கவர்னர் கொல்லப்பட்டுப் போனார். உத்தியோகஸ்தர்கள் போன இடமே தெரியவில்லை. ஆற்றில் போதுமான ஜலம் இல்லாததால் குண்டுப்படகுகள்உதவிக்குப் போக சரிப்படவில்லை. உதவிக்கு, வெகு அவசரமாய்ப் போன, திவில் என்ற சண்டைக்கப்பல் விளக்கின்றி வந்து கொண்டிருந்த ஓர் படகுடன் மோதி மூழ்கச் செய்ததில் 3 பாதிரிகள் ஜலத்தில் மூழ்கி இறந்தார்கள். இது நிற்க ஹாங்கௌவிலும் சிறிய கலகங்கள் சிற்சில இடங்களில் கிளம்பி வருகின்றன.

Balloon Accidents in Germany:—சென்ற இரண்டு வாரங்களுக்குள் புகைக்கூண்டு சவாரி செய்பவர்களுள் 8 பேர்கள் இறந்து போனார்கள் என்றும், மற்றும் பலர் காயமடைந்திருக்கிறார்களென்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இவ்வித விபத்துகள் அதிகரித்து வருவதைக் கவர்மெண்டார் தடுக்க ஆலோசித்து, இப்புகைக் கூண்டு சவாரி செய்பவர்கள் அனுசரிக்க வேண்டி சில விதிகளை ஏற்படுத்தப் போவதாகத் தெரியவருகிறது.

A gang of Dacoits captured:—வங்காள நாட்டைச் சேர்ந்த ஹூக்ளி, பரத்வான், இந்த இரண்டு ஜில்லாக்களிலும் தீவர்த்திக் கொள்ளைகள் போட்டுவந்த ஒரு பெரியக் கூட்டத்தாரைப்போலீஸார் பிடித்திருக்கிறார்கள். பல விடங்களில் கொள்ளையடிக்கப்பட்ட தடையங்கள் (திருட்டுச் சொத்துகள்) பலவற்றை இக்கொள்ளைக் கூட்டத்தாரிட மிருந்து அப்போலீஸார் கைப்பற்றியு மிருக்கிறார்கள்.

Brutal Murder of a Lady:—மார்ச்சு மீ 21௳ மாலை பம்பாய் மலபார்ஹில்லில் தாமோதரதாஸ் லக்ஷ்மிதாஸ்கிம்ஜி என்பவரின் மனைவியாகிய ஜம்னுபாய் என்கிற

விதவை தனது பங்களாவில் கொலையுண்டு கிடந்தாள். இந்த ஸ்திரீயின் வயது 19 தான், ஐந்து வருஷங்களுக்கு முன்னே நாயகனை யிழந்துவிட்டாள் பம்பாய் பட்டியாகுடும்பத்தை சேர்ந்த தனிகன் மனைவி இந்த ஸ்திரீக்கும் காலஞ் சென்ற துவர்க்கதாஸ் தர்ம்சேக்கும் கோர்ட்டில் ஆஸ்தி சம்பந்தமாய் வழக்குண்டாயிருந்து, இப்போது மாதவாரி ஒரு தொகை பெற்றுத் தனிமையாய் ஷை பங்களாவில் வசித்து வந்தாள். வண்டிக்காரிமட்டும் துணையிருந்ததாகத் தெரிகிறது. ஷை தினத்தில் இவள் தனிமையாயிருக்கையில் கொலை செய்யப்பட்டு கட்டிலில் குப்புறமடிந்து கிடந்தாள். கழுத்தில் துணியைக்கட்டி யிறுக்கிக்கொன்றதாகத் தெரிகிறது, கொலைப்பாதகர் யாரென்று தெரியவில்லை. போலீஸார் விசாரணை செய்கிறார்கள்.

The student Savarkar :—நாசிக் கொலைக்கேஸ் விஷயமாய் லண்டனில் சவர்க்கார் என்கிற மாணவன் பிடிபட்டு அடைக்கப்படடிருக்கிறான். ஒரு போலீஸ் சூபரின்டென்டெண்டும் இரண்டு ஐரோப்பிய கான்ஸ்டேபிள்களும் இவனை அழைத்துக் கொண்டுவர லண்டனுக்குப் போகிறார்கள்.

The Nasik Murder Case :—நாசிக் கலெக்டரைக்கொலைபுரிந்த குற்றத்தில் பிடிபட்டு பம்பாயில் ஸ்பெஷல் கோர்ட்டாரால் விசாரிக்கப்பட்டுவந்த குற்றவாளிகள் அறுவரும் தண்டனை யடைந்து விட்டார்கள். துப்பாக்கி கொண்டு கலெக்டரைச் சுட்டுக் கொன்ற ஆனந்த லக்ஷ்மண கானரேக்கும் அது விஷயத்தில் நெருங்கி யுடந்தையாயிருந்த வேறிருவருக்குந் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. மற்ற மூன்றுகுற்றவாளிகளும் தீபாந்திர சிக்ஷை விதிக்கப்பட்டார்கள். இந்தத் தீர்ப்புக்குமேல் அப்பீல் கிடையாது. உதைப்பற்றிப் போலீஸாருக்கு அறிவிக்கத் தவறின ஏழாவது குற்றவாளிக்கு 2 வருஷம் கடின காவல் விதிக்கப்பட்டது.

Terrible tragedy at a Village Ball:—ஹங்கேரியிலுள்ள ஒக்கரிற்றே என்னுமிடத்தில் பால் என்கிற கூத்துநடந்துகொண்டிருக்கையில் கூத்து மண்டபம் அகஸ்மாத்தாய் தீப்பற்றி ஆட்டம் ஆடிக்கொண்டிருந்த நூற்றுக்கணக்கான ஸ்திரீ புருஷர் மடிந்து போனார்கள். அநேகர் மிதிப்பட்டுச் செத்தார்கள். மேற்கூரை விழுந்து நூற்றுக்கணக்கானவரைப் புதைத்துவிட்டது. 320 பிரேதங்கள் எடுக்கப்பட்டன. 120 பேர் போல் வெகு கோரமாய் வெந்து மரிக்குந் தருவாயிலிருக்கிறார்கள். அநேக குடும்பங்கள் நசித்துப்போயின. பல குழந்தைகள் நாதனற்றுப்போயினர்.

A Mission to Depressed Classes :—ஹார்ட்வாரில் குருக்குல வருஷாந்த கூட்டம் நடந்தபோது, தாழ்ந்த ஜாதியாரை உயர்த்துவதைப் பற்றி ஒரு ஆலோசனை சங்கம் கூடிப் பேசப்பட்டது. அநேகம் பேர் வந்திருந்தார்கள். ஆரிய மிஷனெரிகளை அனுப்பித்தாழ்ந்தஜாதிஇந்துக்களுக்கு ஞான போதனை செய்விப்பதோடு அவர்களுக்கு இலவசப்படிப்பு கொடுத்து உயர்த்த வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

Conversion of Christians :—சிலநாட்களுக்கு முன்னர் ஹார்ட்வாரில் கூடின பாரதசுத்திசபா கூட்டத்தில் ஒரு மகமதியன் பிராயச்சித்தஞ் செய்யப்பட்டு இந்துமார்க்கத்தில் சேர்த்துக்கொள்ளப் பட்டதாகவும், அந்தச் சமயத்தில் ஷை சபையின் காரியதரிசி இதுவரையில் இந்தப்படி 206 மகமதியரும் கிறிஸ்தவர்களும் இந்துமார்க்கத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறார்களென அறிவித்ததாகவும் கூறப்படுகிறது. கிறிஸ்துமார்க்கத்திலிருந்து வாஸ்தவமாய் எத்தனை பேர் இந்துமார்க்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்களென்று தெரியவில்லையாயினும் மேற்சொன்ன தொகை பிரமிப்பையும் வியப்பையுமே தருகிறது. ஆகையால் இந்திய கிறிஸ்தவ சங்கத்துக் காரியதரிசி இது விஷயமாக ஷை சபாகாரியதரிசிக்கு எழுதிக்கேட்டுப் பொது ஜனங்களுக்குத் தெரிவித்தல் நன்றென்று அபிப்பிராயப்படும் "கிறிஸ்டியன் பேட்ரியட்" பத்திரிகையின் விருப்பத்தில் நாமும் கலக்கிறோம்.

The union of Nations :—லண்டன் "கிறிஸ்தவன்" என்கிற பத்திரிகை எழுதுகிறது :—தற்காலம் நாம் பல குழப்பங்கள் மத்தியிலிருக்கிறோம். சகல ஜாதிகளுக்குள்ளும் உண்டாயிருக்கிற இந்த அமைதியின்மையின் பொருளென்ன? சீனு கைதேர்ந்த இராணுவங்களோடும்பீரங்கிகளோடும் தீபேத்தின் வாசலில் போயிருக்

றது. 30 கோடி புஸ்தமதருக்குத் தலைமை யான லாமா இந்தியா எல்லை நோக்கி ஓட வேண்டியதாயிற்று. சந்நியாசி மடங்கள் கொள்ளையிடப்பட்டன. சந்நியாசிகள் சிதறடிக்கப்பட்டார்கள். சிற்க, இந்தியா விழித்துக்கொண்டது. தேசாபிமானமென்கிற புது எண்ணம் எங்கும் பரவுகிறது. துர்க்கி பூரண நம்பிக்கையோடிருந்தது இப்போது பிரிவுபட்டுகிடக்கிறது. எகிப்தில் பெருமை தங்கிய முதன்மந்திரி கொலையுண்டார். அவர் கிறிஸ்தவராயிருந்ததால் அவ்வன் கொலைநடந்தது. கிரீஸ்அரசனை நீக்கிவிடுவதைப் பற்றிப் பிரஸ்தாப முண்டாயிருக்கிறது. லண்டனில் லார்ட்ஸ் சபைக்கும் காமன்ஸ் சபைக்கும் விவாதமேற்பட்டு எல்லாந்தடங்கல்பட்டிருக்கிறது. என்ன நடக்கப்போகிறதென்று தெரியவில்லை. இப்போது நம்மைச்சூழ மேகமும் மந்தாரமுமாயிருந்தாலும், கர்த்தருடைய சிம்மாசனத்தின் அஸ்திபாரம் நீதியும் நியாயத்தீர்ப்புமென்று மாத்திரம் தெரியும்.

The Late Dr., G.U. Pope;—காலஞ்சென்றுவிட்ட டாக்டர் போப்பைப்பற்றி அறியாதவரில்லை. அவர் தமிழ்ப்பாஷையிடத்து விசேஷ அபிமானம் வைத்து அதைவிர்த்தி செய்வதில் மிகவும் உழைத்தவர். தாம் மரிக்குமுன் தம்முடைய உயிலில் (Will) தமது பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும், நீங்கள் நான் அடக்கஞ் செய்யப்பட்ட இடத்தில் கோரியென்றெழுப்புவதாயிருந்தால் அக்கோரியை உங்களோடு சேர்ந்து எழுப்ப தென்னிந்தியா நாட்டுத்தமிழர்களுக்கு விருப்பமுண்டாவென்று கேளுங்கள். அவர்கள் விருப்பமிருப்பதாகத் தெரிவித்து உங்களோடு அக்கோரியை எழுப்புவதில் சேரும் பட்சத்தில் “ இர்தக்கோரி டாக்டர் போப்பின் மனைவி மக்களாலும் தென்னிந்தியா நாட்டுத் தமிழர்களாலும் எழுப்பப்பட்டதென்று ஒரு கல்லில் வெட்டிவையுங்கள் ” என்று சொல்லியிருப்பதாகவும் அவருடைய விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதில் அக்கரையுள்ள தமிழர்கள் அக்கோரியை யெழுப்பும் வகைக்காகப் பொருளுதவி செய்ய வேண்டுமென்பதாகவும் கையொப்பங்கள் பச்சையப்பன் காலேஜ் போதகர் மிஸ்டர் செல்வகேசவராயமுதலியாருக்கு அனுப்பப்படலா மென்பதாகவும் தமிழ் அபிமானிகளுக்கு ஒரு மனுச் செய்து கொள்ளப்பட்டிருக்கிறது.

Nasik Murderers:—நாசிக் கலெக்டரைக் கொன்ற ஆனந்த லட்சுமண கரேயும் அவனுக்கு அக்கொலைத் தொழிலைச் செய்வதில் உடந்தையா யிருந்தவர்களாகிய கிருஷ்ணஜி கோபால கார்வேயும் விநாயக நாராயண தேஷபாண்டேயும் நேற்றுக் காலமே தாணு ஜெயிலில் தூக்கப்பட்டார்கள். அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்ததை நேயர்கள் அறிவார்கள்.

Plague in Salem:—சேலம் டவுனில் பிளேக் நோய் புகுந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. 10 தினங்களில் 3 மரணங்கள் நேர்ந்தன. வெய்யில் கடுமையாயிருப்பதால் அதிகம் பரவவில்லையாம். இப்போது அந்நோய் அவ்வூர் கடைத்தெருவுக்குப்பின் பக்கத்துத்தெரு ஒன்றில் குடிகொண்டிருப்பதாயும் அது தன் வன்மையைக் காட்டிப் பரவுமானல் அவ்வூர் கடைத்தெருவையே அது முதலாகத் தாக்குமென்றும் கருதப்படுகிறது. ஏற்கனவே அந்நோய் புகலிடம் பெற்றிருக்கும் இடத்தைச்சுற்றியுள்ள 170 வீட்டுக்காரர்கள் தங்கள் வீடுகளைக் காலி செய்து விட்டுப் போய் விட்டார்களாம். பிளேக் நோயால் மரணம் நேர்ந்த வீடுகளென்றும், அல்லது எலிகள் செத்து வீழ்ந்த வீடுகளென்றும் முனிசிபாலிடியார் மனதில் பட்ட 30 வீட்டுக்காரர்களை முனிசிபாலிடியார் அவ்வீடுகளிலிருந்து அப்புறப்படுத்தி ரிஸர்வ் போலீஸ் லைன்ஸை (Reserve Police Lines) யொட்டிக் கட்டி விடப்பட்டிருக்கும் குடிசைகளில் போய் வசிக்கும் படி செய்துவிட்டு அவ்வீடுகளை யெல்லாம் சுத்திகரித்து வருகிறார்களாம்.

நசரையார் சதகம்:—ஆண்டவருடைய அருண்மொழிகளின் மேல் நூறு விருத்தங்களடங்கியது. இப்பத்திரிகையின் தமிழ் எடிட்டரிடங்கிடைக்கும். ஒரு அணா லேபில் அனுப்பிப் பெற்றுக்கொள்க.